

# எமது உத்வேகமான சந்தைப்படுத்தல் அணியில் இணையுங்கள்!

**நாடு முழுவதிலுமுள்ள எமது கிளை வலையமைப்பில் பணியாற்றுவதற்கு சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் சந்தைப்படுத்தல் அதிகாரிகள் தேவைப்படுகின்றனர்.**

எமது பரந்தளவு சொத்துகள் மற்றும் பொறுப்புகள்சார் தீர்வுகளை விநியோகிப்பதற்கு, உத்வேகமான மற்றும் சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் சந்தைப்படுத்தல் அதிகாரிகளை நாம் எதிர்பார்க்கின்றோம். எமது சென்றடைவு மற்றும் வாடிக்கையாளர் உறவுகளை மேம்படுத்தல் தொடர்பான முக்கியமான பணிகளை முன்னெடுப்பதற்காக எம்முடன் இணையுங்கள்.

மக்கள் வங்கியின் துணை நிறுவனமான பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபைனான்ஸ் பிஎல்சி ஆனது, கொழும்பு பங்குச் சந்தையின் (சிஎஸ்இ) பிரதான வாரியத்தில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் முதன்மையான வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாகக் காணப்படுகிறது.

குளோபல் பிராண்ட்ஸ் சஞ்சிகையால் இலங்கையின் மிகவும் நம்பகரமான நிதி நிறுவனமாக அடையாளப்படுத்தப்பட்ட இந்நிறுவனமானது, ஆறு வருடங்களுக்குள் குத்தகைத் துறையில் சந்தைத் தலைமைத்துவத்தை அதி விரைவாகப் பெற்றதோடு மட்டுமல்லாது, ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இதனை நிலைநிறுத்தி வருகிறது.

நாடளாவிய ரீதியில் 100 இற்கும் மேற்பட்ட கிளைகள் மற்றும் அர்ப்பணிப்புடைய ஊழியர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட வலுவான வலையமைப்பை, தமது பெறும் பலமாகக் கொண்ட பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபைனான்ஸ் பிஎல்சி ஆனது, பல்வேறுபட்ட தயாரிப்புகள் மற்றும் சேவைகள் மூலமாக பரந்த அளவிலான நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்து, தனது வாடிக்கையாளர்களுடனான நல்லுறவைத் தொடர்ந்தும் பலப்படுத்தி வருகிறது.

## பிரதான பொறுப்புகள்:

**சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள்:**
தனிநபர் வாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டாண்மைகளுக்கு நிறுவனத்தின் சகல தீர்வுகளையும் ஊக்குவித்தல், உறுதியான உறவுகளை கட்டியெழுப்பி பேணுதல். தனிநபர் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு விவரமான முன்மொழிவுகளை தயாரித்தல் வாடிக்கையாளர் விஜயங்கள் மற்றும் பல்வேறு ஊக்குவிப்பு செயற்பாடுகளினூடாக சந்தை வாய்ப்புகளை இனங்காணல். வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய தீர்வுகள் வடிவமைப்பில் உதவுதல்.

**சந்தைப்படுத்தல் அதிகாரிகள்:**
வாடிக்கையாளர் உறவுகளை கட்டியெழுப்பி பேணுவதுடன், நிறுவனத்தின் தீர்வுகள் மற்றும் சேவைகளை ஊக்குவித்தல். வாடிக்கையாளர் விஜயங்கள் மற்றும் பல்வேறு ஊக்குவிப்பு செயற்பாடுகளினூடாக சந்தை வாய்ப்புகளை இனங்கண்டு அவற்றை கையகப்படுத்தல்.

## விண்ணப்பதாரியின் தகைமைகள்:

**சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள்**

- சந்தைப்படுத்தல் / வியாபார அபிவிருத்தி ஆகியவற்றில் ஆகக்குறைந்தது 05-06 வருடங்கள் பணியாற்றிய அனுபவம், குறிப்பாக லீசிங் அல்லது வங்கியியல் துறையில்.
- சந்தைப்படுத்தல் / முகாமைத்துவத்தில் தகைமையை கொண்டிருப்பது மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- சிறந்த தொடர்பாடல் திறன்கள்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் / மோட்டார் சைக்கிள் செலுத்தும் அனுமதிப்பத்திரம்.

**சந்தைப்படுத்தல் அதிகாரிகள்**

- சந்தைப்படுத்தல் / வியாபார அபிவிருத்தி ஆகியவற்றில் ஆகக்குறைந்தது 01 வருடம் பணியாற்றிய அனுபவம், குறிப்பாக லீசிங் அல்லது வங்கியியல் துறையில்.
- சிறந்த தொடர்பாடல் திறன்கள்.
- கணித பாடத்தில் (C) சித்தி அடங்கலாக க.பொ.த. சா.தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
- பிரதான பாடங்களில் 3 எளிமையான சித்திகளுடன் க.பொ.த. உ. தர பரீட்சையில் சித்தி.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் / மோட்டார் சைக்கிள் செலுத்தும் அனுமதிப்பத்திரம்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது:**
இந்த விளம்பரம் பிரசுரமாகி 7 தினங்களுக்குள் விண்ணப்பிக்கும் பதவி நிலையை மின்னஞ்சலின் தலைப்பில் குறிப்பிட்டு **careers@plc.lk** எனும் மின்னஞ்சலுக்கு விண்ணப்பத்தை அனுப்பவும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுடன் மாத்திரம் தொடர்புகள் முன்னெடுக்கப்படும்.

**புத்தாக்கம், அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பை மதிக்கும் அணியில் இணைந்து கொள்ளுங்கள். உங்களுக்கான எதிர்காலம் காத்திருக்கின்றது!**

PLC
PEOPLE'S LEASING
පීපල්ස් ලීසිං | பீப்பள்ஸ் லீசிங்
THE TRUSTED LEADER